**2026 மார்ச் மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 32/2021**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 32/2021 | பெயர்: ஈஸ்வரி<br>க/பெ.சங்கரபாலு | PW4 | 26.03.2026 |

(1, 2, 4, 9 எதிரிகள் ஆஜர், மற்ற எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)

**சாட்சி Crl.M.P. 4556/2022 மனு 17.11.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு 1, 2, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. வழக்கு சம்பந்தமாக நான் நீதிமன்றத்தில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோனதாக சொல்லப்படும் செல்லப்பாண்டி எனது அண்ணன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேன் என்றால் சரிதான். 21.02.2020ம் தேதி மஹாராஜன் சித்ரா வீட்டிற்கு வந்திருந்தார் என்றும், நானும், எனது உறவினர்களும் மஹாராஜனை விசாரித்தோம் என்று ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன்.

2. காவல்நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்று மஹாராஜனிடம் கூறினேன் என்றும், மஹாராஜன் புகார் கொடுக்க வேண்டாம் என்றும், செல்லப்பாண்டி விரைவில் வந்துவிடுவார் என்று ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன்.

ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் 2ம் எதிரி தெய்வேந்திரன் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னேன். காவல் ஆய்வாளர் தேனி, ராஜா லாட்ஜில் அன்புகணேஷ், செந்தில் ஆகியோரை கைது செய்ததாக என்னிடம் கூறினார் என்ற விபரத்தை ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன்.

3. நானும், எனது உறவினர்களும் உச்சிப்புளி என்ற ஊருக்கு சென்றோம் என்று ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். காவல் ஆய்வாளர் 4 வது எதிரி தினேஷ், 7 வது எதிரி கிஷோர், 6 வது எதிரி அன்புகணேஷ், 5 வது எதிரி செந்தில் ஆகியோர்களை காவல் ஆய்வாளர் கூட்டி வந்தார் என்றால் ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி 4 எதிரிகளின் பெயர்களை ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னேன்.

4. கிராம நிர்வாக அலுவலர் அங்கு இருந்த விபரத்தை ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். மருத்துவர் எலும்பு துண்டுகளை எடுத்துக் கொண்டார் என்றும், அடக்கம் செய்ய எலும்பு துண்டுகளை எங்களிடம் கொடுத்தார் என்றும், எலும்பு துண்டுகளை வாங்கி எரித்து, கடலில் கரைத்தோம் என்று ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். சித்ராவும், எனது அண்ணன் செல்லப்பாண்டியும் திருமணம் முடித்து 10, 12 வருடங்கள் சந்தோஷமாக இருந்தார்கள் என்றால் சரிதான்.

5. எனது அண்ணன் செல்லப்பாண்டி கேரளாவிற்கு அடிக்கடி வேலைக்கு சென்று வருவது வழக்கம் என்றால் சரிதான். வேலையை முடித்துவிட்டு, கேரளாவிலிருந்து வருவதற்கு 1, 2 மாதங்கள் ஆகும் என்றால் சரிதான். எனது அண்ணன் ராமராஜ் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் ராமராஜ் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். 4 வது எதிரி தினேஷ், 7 வது எதிரி கிஷோர், 6 வது எதிரி அன்புகணேஷ், 5 வது எதிரி செந்தில் ஆகியோர்களை உச்சிப்புளியில் பார்ப்பதற்கு முன்பு நான் மேற்படியார்களை பார்த்ததில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து சுமார் 1 1/2 வருடங்கள் கழித்து இந்த நீதிமன்றத்தில் நான் சாட்சியம் சொன்னேன் என்றால் சரிதான்.

6. நான் சாட்சியம் சொன்ன பின்பு உச்சிப்புளியில் பார்த்த மேற்படி எதிரிகளை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சிறையில் என்னை எதிரிகளை அடையாளம் காட்ட சொன்னார்களா என்றால் இல்லை. 1 வது மஹாராஜன், 2 வது தெய்வேந்திரன், 9 வது எதிரி சித்ரா ஆகியோர்களை தவிர்த்து மற்ற எதிரிகளை அடையாளம் காட்ட முடியுமா என்றால் ஒருமுறை 7 வது எதிரி கிஷோர், 4 வது எதிரி தினேஷ், 5 வது எதிரி செந்தில் ஆகியோர்களை உச்சிப்புளியில் வைத்து பார்த்தேன், அதன்பின்பு பார்க்கவில்லை.

7. உச்சிப்புளியில் வைத்து நான் பார்த்த பிரேதம் முழுமையாக சேதமடைந்து அடையாளம் தெரியாத அளவிற்கு இருந்தது என்றால் சரிதான். வருஷநாட்டிற்கும், தங்கம்மாள்புரத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். 1, 2, 9 வது எதிரிகளின் பெயர்களை தவிர மற்ற எதிரிகளின் பெயர்கள் போலீசார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

கடமலைக்குண்டிலிருந்து உச்சிப்புளிக்கு எப்படி சென்றோம் என்றால் வேனில் சென்றோம். நாங்கள் சென்ற வேன் ஓட்டுநர் பெயர் மற்றும் வேனின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எனது அண்ணன் ராமராஜிற்கு தெரியும். எத்தனை மணிக்கு கடமலைக்குண்டிலிருந்து கிளம்பினோம் என்றால் காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள் கிளம்பி இருப்போம். எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை 4 மணி இருக்கும்.

8. உச்சிப்புளியிலிருந்து பிரேதம் கிடந்த இடம் ஒரு பனந்தோப்பு என்றால் உச்சிப்புளி பள்ளிவாசல் வழியாக பனந்தோப்பிற்கு ஆய்வாளர் எங்களை அழைத்து சென்றார். பள்ளிவாசல் உச்சிப்புளி ஊருக்குள் உள்ளது என்றால் இல்லை, ஊருக்கு வெளியே இருந்தது. அந்த பள்ளிவாசல் ஆட்கள் இருந்தார்களா என்றால் மருத்துவர், கிராம நிர்வாக அலுவலர், தாசில்தார் ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்களும் எங்களுடன் சேர்ந்து பிரேதம் இருந்த இடத்திற்கு எங்களுடன் வந்தார்களா என்றால் பிரேதம் இருந்த இடத்திலேயே இருந்தார்கள்.

9. பிரேதம் அந்த இடத்தில் இருக்கிறது என்பதை தெரிந்து, கிஷோர், நான், மற்ற எதிரிகள் அனைவரும் பிரேதம் கிடந்த இடத்திற்கு ஆய்வாளர் அழைத்து சென்றார் என்றால் பிரேதம் கிடந்த இடத்திற்கு 7 வது எதிரி கிஷோர் சொல்லி ஆய்வாளர் அழைத்து சென்றார். எனது அண்ணன் செல்லப்பாண்டி மீது கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். செல்லப்பாண்டி நிறைய நபர்களிடம் கடன் வாங்கி, கடனை திருப்பி செலுத்தாமல் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல.

10. மேலப்பட்டியில் வகுத்தூ மஹாராஜன் என்பவர் இருக்கிறார் என்றால் இருக்கிறார். அவரது மனைவியை எனது அண்ணன் செல்லப்பாண்டி கையை பிடித்து இழுத்ததாக ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் வழக்கு இருந்தது என்றால் சரிதான், அது தோட்டத்து பிரச்சனை ஆகும். கடமலைக்குண்டு பக்கத்தில் கரட்டுப்பட்டி என்ற ஊர் உள்ளது என்றால் சரிதான். கரட்டுப்பட்டியை சேர்ந்த முருகன் மனைவியை மானபங்கம்படுத்தியதற்காக செல்லப்பாண்டி மீது ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான், அவர்களுக்குள் இருந்த பிரச்சனையால் கொடுக்கப்பட்ட புகார் ஆகும், முருகனும், அண்ணன் செல்லப்பாண்டியும் நண்பர்கள், அவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையால் கொடுக்கப்பட்ட பொய் புகார் ஆகும்.

11. எனது அண்ணன் செல்லப்பாண்டியின் பெயர் கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் ரௌடி பட்டியலில் உள்ளது என்றால் சரிதான், ஆனால் சிறு சிறு பிரச்சனைகளுக்காக போடப்பட்ட வழக்குகள் ஆகும். ஆண்டிபட்டி, கொண்டமநாயக்கன்பட்டியில் ராணி என்பவருடன் எனது அண்ணன் செல்லப்பாண்டிக்கு தவறான தொடர்பு இருந்தது என்றால் சரியல்ல. ராணியின் கணவர் சம்பவத்திற்கு முன்பு கொலை வழக்கில் தண்டனை பெற்று வெளியில் வந்துவிட்டார் என்றாலும், அவரது மனைவியுடன் எனது அண்ணனுக்கு தொடர்பு இருந்ததால் அவர் எனது அண்ணன் மீது விரோதம் கொண்டிருந்தார் என்றால் சரியல்ல.

12. செல்லப்பாண்டிக்கு ஊர் மற்றும் மற்ற பகுதிகளில் எதிரிகள் நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சென்று பார்த்த பிரேதம் எனது அண்ணனின் பிரேதம் இல்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணன் செல்லப்பாண்டியும், சித்ராவும் சந்தோஷமாக வாழ்ந்து

வந்தார்கள் என்றால் 10 வருடங்களாக நன்றாக வாழ்ந்து வந்தார்கள். போலீசாரும், எனது அண்ணன் ராமராஜூம் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

<u>1, 2, 9 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொண்டு 3 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

13. இவர் தான் சக்திவேல், தினேஷ், கிஷோர், செந்தில்குமார், அன்பு என்று போலீசார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படியார்களை நீதிமன்றத்தில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியாது என்றால் சரியல்ல, பார்த்தால் காட்ட முடியும். எதிரிகளில் 3 வதாக நின்றிருக்கும் நபரை பார்த்து, அவர் பெயர் சொல்ல முடியுமா என்றால் அவர் மொட்டை அடித்துள்ளதால் சரியாக தெரியவில்லை, அன்பு என்று நினைக்கிறேன். எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும், போலீசார் விசாரணையிலும் எதிரிகளின் அடையாளம் காட்டி எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டேனா என்றால் சொல்லவில்லை.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.03.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.26 16:19:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
26.03.2026